திருமங்கைமன்னன்

இது

பூ. அ. பாஷ்யம் ஐயங்கார், பி.ஏ., எல்.டி.,

எழுதியது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1927

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 2 அணா

Printed at the "Aurora Press," Madras.

பொருளடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	ஆலிநாடரின் திருவவதாரம் - -	5
2.	குமுதவல்லியாரின் வரலாறு - - -	6
3.	திருமங்கைமன்னன் திருமணம் - -	9
4.	சோழமன்னன் சீற்றம் - - -	13
5.	ஆலிநாடரது போர்த்திறம் - -	14
6.	சோழன் ஆலிநாடரைச் சிறைப்படுத்தல் -	,,
7.	எம்பிரான் திருவருள் - - -	15
8.	ஆழ்வார் வழிபறித்தல் - - -	19
9.	பகவான் ஆழ்வாருக்கு உபதேசித்தல் -	20
10.	ஸ்தல யாத்திரை - - - -	22
11.	சம்பந்தர் ஆழ்வாரைக் கௌரவித்தல்	23
12.	பெரியபெருமாள் நியமனம் - - -	25
13.	ஆழ்வார் பொருள் தேட முயலுதல் -	26
14.	இயந்திர ரகசிய மறிதல் - - -	,,
15.	பாக்கு வியாபாரியை ஏமாற்றிப் பணம் பறித்தல் -	28
16.	உபாயத்தால் புத்த விக்கிரகத்தைக் கவர்தல் - -	31
17.	நில வழக்கு - - - -	34
18.	நாகபட்டினத்துத் தலைவரை வஞ்சித்தல் -	36
19.	கம்மாளர்க்குப் பரமபத மளித்தது -	39
20.	திவ்ய தேச மங்களாசாஸனம் - - -	42
21.	அத்யயனோத்ஸவம் - - -	43
22.	பரமபதமடைந்தது - - - -	44

(17-ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

திருமங்கைமன்னன்

1. ஆலிநாடரின் திருவவதாரம்

சோழவள நாட்டில் **திருக்குறையலூர்** என்னும் பதியொன்றுண்டு. அப் பதியில் கள்ளர்குடியிற் பிறந்து சோழமன்னனிடம் சேனைபதிப் பதவியை வகித்த ஒருவர் இருந்தார். அவருக்குக் கார்த்திகை மாதத்தில் கிருத்திகா நக்ஷத்திரத்தில் ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தையின் திருமேனி நீலநிறத்தோடுங் கூடியிருந்தமையால் தந்தை அதற்கு **'நீல நிறத்தன்'** என்று பெயரிட்டு அதை வெகு அருமையுடன் சீராட்டி வளர்த்து வந்தார்.

நீலநிறத்தரும் தமதிளமைப்பருவத்திலேயே தாம் கற்கவேண்டிய எல்லாக் கலைகளிலும் வல்லவரானார். தமது **ஜாதிக்கு** இன்றியமையாதனவாகிய ஆயுதப் பயிற்சியில் தேர்ச்சி யடைந்தார். தந்தையார் மரித்த பின், அரசனிடம் சேனைத்தலைமை யுத்தியோகத்தில் அமர்ந்து புகழும் பெருமையும் அடைந்தார். அவர் தமது சௌரியத்தால் அரசனது பகைவர்களை வென்று, **பரகாலன்'** என்னும் பேர்பெற்று விளங்கினார். அவ

ருடைய உதவியால் சோழனது பெருமை மேம்பட்டது. சிற்றரசர் பலரைத் தன் வயப்படுத்தி அவர்களுக்குத் தலைமைபூண்டு அவர்களிடம் பகுதிப் பணம் வாங்கிப் பேரரசனாய்ச் சோழன் கீர்த்தி யடைந்ததற்கு நீலநிறத்தரே காரணராயிருந்தனர். நீலநிறத்தரது போர்த்திறமையையும் குணாதிசயங்களையும் நேரிற்கண்டு மகிழ்ச்சியடைந்த சோழராஜன், அவரிடம் அன்புபூண்டு அவரை மங்கைநாட்டுக்கு மன்னனாக்கி முடிசூட்டினான். மங்கையர்கோனும் அரசர்க்குரிய கலைகளையும் அரசியலுக்கு இன்றியமையாதனவாகிய நூல்களையும் முற்றும் அறிந்தவராகையால், அக்குறுநிலத்தலைமைபூண்டு செங்கோல் செலுத்திச் சோழனுக்குக் **கண்ணுங் கவசமும்**போலிருந்து இராஜகாரியங்களைக் குறைவின்றி நடத்தி வந்தார்.

2. குமுதவல்லியாரின் வரலாறு

அங்ஙனம் வருகையில், ஒரு நாள் **திருவெள்ளகுளம்** என்னும் நகரில் உள்ள தாமரைத் தடாகத்தில் **திருமாமகள்** என்னும் பெயரையுடைய அமரமங்கையொருத்தி மானிட வடிவங் கொண்டு குமுதமலர் கொய்துகொண் டிருந்தாள்.

அப்போது மருத்துவ வைணவர் ஒருவர் தம் அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு அவ் வழியாய்ச் சென்றுகொண் டிருந்தார். செல்லுகையில், தடாகத்தில் மலர் கொய்து நின்ற சிறுமியின் அழகையும் வடிவையுங்கண்டு வியப்புற்று அவளையணுகி, 'பெண்ணே! நீ யாவள்? இங்குத் தனித்திருக்கக் காரணமென்ன?' என்று வினவினார்.

அப் பெண்மணி வைணவரை நோக்கி, 'ஸ்வாமீ! நான் ஒரு தேவமடந்தை; எனக்குச் 'சுமங்களை' என்று பெயர். ஒரு காலத்தில் நான் என் தோழிகளுடன் ஹிமவத்கிரியில் உள்ள சித்தாச்சிரமஞ் சென்றேன். அவ்விடத்திற் சில மகரிஷிகள் கபிலாசார்யரிடம் ஞான நூல்களை அத்யயனஞ் செய்துகொண் டிருந்தனர். அங்குக் குழுமியிருந்தவரில் சித்தபுருஷன் ஒருவன் குரூபியாயிருக்கக் கண்டு அவனை ஏளனஞ் செய்தேன். நான் பரிகசித்ததைக் கண்டு கபிலாசார்யர் என்மீது மிகவுங் கோபங் கொண்டார். நான் என் கர்வத்தால் அவருடைய சீற்றத்துக்குள்ளானேன். அவர் என்னை நோக்கி, "பேதாய்! எழில்நல முடையே யென்றும், இருநிதி படைத்தே மென்றும் இறுமாந்து அச்செருக்கால் பிறரை இகழ்வோர் சான்றோரின் சீற்றத்துக்குள்ளாவர் என்பதற்கு நீயே உதாரண மாயினை. நீ அச் சித்தபுருஷனின் மகிமை யறியாத பேதையானாய். நீ அவருடைய வடிவத்தை நோக்கி நகைத்தமையால் நீ மனித தேகமெடுத்து மிலேச்ச மரபினனுக்கு வாழ்க்கைப் படுவாயாக" என்று கடுமையாகச் சபித்தனர். அவ் வுரை கேட் டஞ்சி யானும் அவ்வாசிரியர் திருவடிகளில் விழுந்து பணிந்து நான் அறியாமையா லிழைத்த பிழையைப் பொறுத் தருளும்படி பிரார்த்தித்து நின்றேன். என் நிலைகண் டிரங்கி அச்சீரியரும், "பெண்ணே! என் சாபம் இனி வீணாகாது. விதி வலிதாகையின் நீ தப்ப வழி யில்லை. ஆயினும், நீ திருமங்கை நாட்டை யரசாளும் ஆலிநாடரை மணந்து அவரைத் திருத்தி வைணவராக்கினையானால், அவர் மூலமாய் நீ நற்கதி பெறுதற்கு வழி யுண்டு. அவர் இழிகுலத்து உதித்தவரேனும் சாமானிய ரல்லர். திருமாலின் பஞ்சாயுதங்

கருள் ஒன்றுகிய சார்ங்கத்தின் அம்சத்தராய் உலகில் அவர் அவதரித்துள்ளார். அவருக்கு உகந்த மனைவியாகி அவரை ஹரிபக்தரைக மாற்றிச் சுகப்படுவாயாக” என்று அநுக்கிரகித்தனர்.

‘பின்னர் ஒரு நாள் நான் என் தோழியராகிய அமர மகளிற் பலருடன் இத் தாமரைப் பொய்கையில் நீராடிக் குமுதமலர் கொய்கையில், அவர்கள் என்னை இவ்விடத்தில் தனியே விட்டுப் பிரிந்து சென்றனர். கபிலரின் சாப மகிமையால் நான் மானிட வேடம் பூண்டு அவதிப்படுகின்றேன். மீண்டும் பொன்னக ரேகும் வழியை அறிகிலேன். என்னை ஆதரிப்போர் ஒருவரும் இலர். என் செய்வேன்! அச்சமின்றிப் பெரியோரைப் பழித்ததனால் விளைந்த பயனை அநுபவிக்கிறேன். என் பேதைமைத் தன்மையால் பெரியோரிடம் அபசாரப்பட்டேன். இனி நான் உய்யும் வகை யாதோ அறிகிலேன்.

‘அனையாய்த் தவித்துக் கலங்கி நிற்கையில் கடவுளே என் ஏழ்மைநிலைக் கிரங்கித் தேவரீரை இவ்விடங் கொண்டு சேர்த்தார் என்று நினைக்கிறேன். அடியாள் தேவரீரையே தஞ்சமாக அடைகிறேன். **“பெண்ணென்றாற் பேயு மிரங்கும்”** என்பார்கள். ஆகையால் தேவரீர் இவ் வேழைமீது கருணை காட்டித் தேவரீரது இல்லத்திற்குக் கூட்டிச் சென்று ஆதரித்து அருள் புரிய வேண்டும்’ என்று கதறி யழுது அவருடைய திருவடிகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு வணங்கினாள்.

மருத்துவப் பிராமணர் அந் நங்கையின் பரிதாப நிலையைக்கண்டு மனங்கசிந்து உருகி, ‘மக்கட்பேறின்றி வாடும் நமது பிரார்த்தனைக்குப் பகவான் உவந்து இப்

பெண்ணை நமக்கு அளித்தார் போலும். இவ் வழகிய பெண்ணைப் பெறுதற்கு நாம் செய்த தவந்தானென்னே! பக்தர்களின் வேண்டுகோளுக்குத் தகுந்த பலனைப் புரிந்தளிக்கும் பரமன் திருவருட் சிறப்பை என்னேன்று புகழ்வது !" என்று தம் கண்களினின்றும் ஆனந்த அருவி சோரவும், உரோமம் புளகிக்கவும் களிக்கடலில் மூழ்கினார். அவர் அப் பெண்ணை அன்போடு உபசரித்துத் தம் அகத்திற்குக் கூட்டிச் சென்றார்.

3. திருமங்கை மன்னன் திருமணம்

பிள்ளையில்லாப் பாவியானோமே என்று ஏங்கியிருந்த தம் மனைவியை நோக்கி, வேதியர் பகவத் ஸங்கற்பத்தால் தமக்கு அப்பெண் கிடைத்த வரலாற்றினையெடுத்துக் கூற, அவள், அப் பெண்ணின் ரூபலாவண்யத்தைக் கண்டு வியந்து கண் பெற்ற பிறவிக் குருடன் அடையும் இன்பத்தினும் பன்மடங்கதிகமான ஆனந்தமடைந்தாள். அவள் குமுதமலர் கொய்துகொண்டிருக்கையில் தம் கண்ணுக்கெதிர்ப்பட்டமையே காரணமாக் அவளுக்குக் 'குமுதவல்லியார்' என்று பெயரிட்டுச் சீராட்டி வளர்த்து வந்தனர். அக் கன்னிகையும் பெதும்பைப் பருவ மடைந்து கண்டோர் யாவரும் வியந்து கொண்டாடும்படி பகவத் பக்தியுடையவளாய்ச் சிறந்து விளங்கினாள். சத்தியம், தயை, சாந்தம், விநயம் முதலிய நற்குணங்கட் குறைவிடமாய் 'குன்றிலிட்ட விளக்குப்' போல் குமுதவல்லியின் பெருமை எங்கும் பரவியது.

திருநாங்கூரில் குமுதவல்லியார் எல்லா லக்ஷணங்களோடும் வளர்ந்து வருவதைக் கேள்வியுற்ற ஆலிநாடர் அவளைத் தமக்குரிய இல்லக்கிழத்தி யாக்கிக்

கொள்ள விருப்பங் கொண்டார். தமது கருத்தை முடித்துக்கொள்ள வெண்ணி மங்கைமன்னன் தன் நகர் விட்டுப் புறப்பட்டுத் திருநாங்கூர் போய் விசாரிக்கையில் குமுதவல்லியார் மருத்துவப் பிராமணர் அகத்தில் வளர்வதை யறிந்து அவ் வீட்டை அடைந்தார். தம்மை அன்புடன் வரவேற்று உபசரித்த மறையவரைக் குசலம் வினவி அவருடன் அளவளாவி யிருக்கையில், குமுதவல்லியும் தற்செயலாய் அவ்விடம் வந்தாள். பரகாலன் அச் சுந்தரியைக் கண்டவுடன் ஆச்சரிய மடைந்தார். அவளது அழகிய உருவமும், குளிர்ந்த பார்வையும், அன்னமென் னடையும் அவரது உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளை கொண்டன. எப்பாடு பட்டாவது அவளைத் தம் மனைவியாகப் பெறவேண்டுமென்று நிச்சயித்தார். அவளைப் பெறுமல் தம் உயிர் தரியாதென்று அவர் நினைத்தார். அவள் அவ்விடம் விட்டு மறைந்தவுடன் திருமங்கை மன்னன் மறையவரை நோக்கி, 'ஸ்வாமீ! தங்கள் ஆதரவின்கீழ் வளர்ந்து வரும் இவ் வனிதையைப் பற்றிப் பலர் கொண்டாடக் கேட்டிருக்கிறேன். அவளைக் காண வேண்டுமென்னும் எண்ணம் எனக்கு வெகுநாளாய் உண்டு. இன்றைய தினம் அவள் தரிசனம் பெற்றுப் பெருமகிழ்ச்சி யடைந்தேன். என மனமும் அவளது சுந்தர ரூபத்தையே பற்றி நிற்கின்றது. அவள் எனக்கு உரிமைப்படாவிடின் என் ஆவி உடலில் தரியாது. தேவரீர் கிருபையுடன் அக் கன்னிகையை எனக்கு விவாகம் செய்து கொடுக்கப் பிரார்த்திக்கின்றேன். உம்மை என்றும் மறவேன்' என்று கூறினர்.

மறையவரும் மன்னன் கொணர்ந்த ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொண்டு அவருடைய கருத்துக்

கிசைந்தார். அவர் குமுதவல்லியை அழைத்துத் தம் விருப்பத்தை வெளியிட்டார். அப் பெண்மணி மறைய வரை நோக்கி, 'தந்தாய்! அடியாள் தேவரீரது ஆணைக்கு மீறி நடப்பதுண்டோ? ஆயினும், என் மனோரதப்படி இம் மன்னர் நடந்துகொண்டால் அவருக்கு வாழ்க்கைப் பட எனக்கு யாதொரு ஆக்ஷேபமு மில்லை. அவர் ஸ்ரீ வைஷ்ணவர்க்கு இன்றியமையாதனவாகிய பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்று ஊர்த்வ புண்ட்ரதாரியாய் மீள்வராயின், அவரை நான் என் நாயகனாக வரிக்கத் தடை யில்லை. திருவிலச்சினை யில்லாதார்க்கு நான் வாழ்க்கைப்படேன். இதுவே என் தீர்மானம். பேதை யின் மனவுறுதியை நோக்கி வருந்த வேண்டாம்' என்று விடை பகர்ந்தனள்.

நீலனார் அவளது பகவத் பக்தியைக் கண்டு அதிச யித்து மறையவரிடம் விடை பெற்றுச் சென்று திரு நறையூர் என்னுந் திவ்ய ஸ்தலத்தை அடைந்தார். அப் பதியில் எழுந்தருளியிருக்கும் நம்பிமெய்ம்பெருமான் சந் நிதி குறுகி, அக் கடவுளை வணங்கி நின்று, 'ஸ்வாமீ! அடியேனைப் புனிதனாக்கி அருளல் வேண்டும். ஏழை கட்கிரங்கும் பரமகுருவே! தேவரீரையே சரணாக வந் தடைந்தேன். நான் பிறந்த பயன் பெற்று உய்யுமாறு, எனக்குப் பஞ்ச ஸம்ஸ்கார பூர்வமாக உபதேசம் செய் தருளப் பிரார்த்திக்கிறேன். தேவரீர்க்கு அந்தரங்க பக்தி செய்து வரும் புனிதவதியாகிய குமுதவல்லியால் நான் மதிபெற்றேன். அடியேனைக் காத் தருள வேண் டும்' என்று குறையிரந்தார்.

பக்தவத்ஸலனான பரந்தாமனும் ஆலி நாடர்க் கருள்கூர்ந்து சங்குசக்கரங்களை அவரது திருத்தோள்க

ளிற் பொறித்துத் திருமந்திரத்தை உபதேசித்தருளி னார். மங்கைநாடரும் திருவிலச்சினையும், திருமண் காப்பும் தரித்துக்கொண்டு நம்பியெம்பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு மருத்துவப் பார்ப்பனரின் இல்லம் நோக்கி விரைந்து நடந்தனர்.

பரகாலரின் முகத்தில் வைணவர்க்குரிய அற்புதக் காந்தி நிலவக் கண்டு, குமுதவல்லியார் மனமகிழ்ந்து அவரை முற்றிலும் திருத்திப் பெருமை யடையலா மென்னு மெண்ணத்துடன் அவரை நோக்கி, 'தேவரீ ரைக் கணவனாகக் கொள்வதற்கு இனி யாதொரு தடையு மில்லை; ஆயினும் தேவரீரிட மிருந்து வாக்குறுதி யொன்று பெற்ற பின்னரே தேவரீரை நாயகனா யடை வேன். இன்று முதல் ஓராண்டளவும் தினந்தோறும் ஆயிரத்தெட்டு அடியவர்க்கு அறுசுவையுண்டி அளித் துப் பின் எஞ்சிய அன்னத்தையும், அவர் திருவடிகளை நன்னீர் கொண்டு விளக்கி ஏந்திய உதகத்தையும் தாரக மாக உட்கொண்டு தூய்மை பெற்று மீள்வதாக ஆணை யிட்டுச் சொல்வீராகில் நான் அந்த க்ஷணத்திலேயே உமக்கு உரிமையாவேன்' என்று கூறினள்.

அந் நங்கையின் சீலத்தையும் பாகவத பக்தி யையும் வியந்து, நீலனார் அவளது இஷ்டப்படியே செய்து அவளுக்குத் திருப்தியை உண்டாக்குவதாக வாக்களித்தார். அப்பெண்ணும் தான் கொண்ட விரதம் அன்றே முடிந்ததென்று களிப்படைந்தாள். மருத்து வரும் விவாகத்துக்குரிய நாளொன்று குறிப்பிட்டு நல்ல முகூர்த்தத்தில் குமுதவல்லியாரை நீலனார்க்குப் பாணிக் கிரகணம் செய்துவைத்தார்.

4. சோழ மன்னன் சீற்றம்

அப்பால், திருமங்கைமன்னன் ஆயிரக்கணக்கான பாகவதரை வரவழைத்து, அவர்க்கு வேண்டியன உதவி, தம் செல்வ முழுவதையும் அவர்பொருட்டே செலவுசெய்து, அவர்களைத் தினந்தோறும் ஆராதித்து வந்தார். பிரதிவருஷமும் தாம் சோழமன்னனுக்குச் செலுத்தவேண்டிய பகுதிப் பணத்தை அவனுக்குக் கொடாமல் ஆலிநாடர் செலவிட்டு வருவதை அறிந்து, சோழன் கடுஞ்சினமடைந்து, அவரிடமிருந்து இறைந் தொகையை வசூலிக்கத் தம் ஏவலாளரிற் சிலரை அவ ரிடம் அனுப்பினான். அரசன் ஆணையைச் சிரமேற்றாங்கி அச் சேவகர் திருமங்கைமன்னனை அணுகி, 'உம்மிட மிருந்து சேரவேண்டிய பகுதியைப் பெற்று வரும்படி எங்களைச் சோழன் அனுப்ப வந்தோம்; உடனே தொகை யைச் செலுத்தும்' என்று நிர்ப்பந்தித்தனர். ஆலிநாடர், 'இன்றைக்குத் தருகிறேன், நாளைக்குத் தருகிறேன்' என்று தவணைகளிட்டு வந்தார். அவரிடம் பணம் பெறு வது கஷ்டமென்றறிந்த உத்தியோகஸ்தர் தம் அரச னிடம் விரைந்து சென்று விஷயங்களை அறிவித்தனர்.

பரகாலனின் மோசக் கருத்தை யறிந்த சோழ பூபதி தன் கண்களிற் பொறி வீசச் சினந்து தன்சேனைத் தலைவனை வரவழைத்து, 'ஆலிநாடன் நம்மைப் பொருட் படுத்தாமலே நமது திரவியத்தைத் தன் மனம்போனபடி செலவிட்டு வருகிறான். அவனது துடுக்கை அடக்கி அவனைத் தண்டித்தா லன்றி அவன் திருந்த மாட்டான். ஆதலின், நீ உடனே சென்று அவனைப் பிடித்து வா' என்று கட்டளையிட் டனுப்பினான்.

5. ஆலிநாடரது போர்த் திறம்

சேனாபதியும் அரசன் ஏவிய விதமே சதுரங்க சேனாபலத்துடன் சென்று பரகாலரை வளைத்து எதிர்க்கத் தொடங்கினான். பகைவர்க்குப் பணிதலறியாத வீரர்திலகராகிய ஆலிநாடர் சிறிதும் அஞ்சாமல் **ஆடல்மா** என்னுந் தமது திவ்ய புரவிமீ தேறிவந்து சோழன் சேனையை நாலா பக்கங்களிலும் சிதறியோட்டிப் போர் புரிந்தார். சோழனது சேனாவீரர்கள் போர்க்களத்தினின்றும் தப்பி யோடித் தம் அரசனிடம் பரகாலரது போர்த் திறத்தையும், தம் தோல்வியையும் எடுத்துரைத்தனர். அதுகேட் டரசன் முன்னிலும் அதிகமாகக் கோபித்து, தானே பெருஞ் சேனைக்குத் தலைமை பூண்டு ஆலிநாடரை எதிர்க்கப் புறப்பட்டான். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆலிநாடரோ சிறிதும் மனஞ் சலியாமல் அரசனோடு பொருது அவனது படைவீரரைத் தம் வாளுக்கிரையாக்கினார்.

6. சோழன் ஆலிநாடரைச் சிறைப்படுத்தல்

அரசனும் அவரை வெல்வது அரிதென்றுணர்ந்து யுத்தத்தை நிறுத்தி அவரை நோக்கி, 'ஆலிநாட ! பரகாலன் என்னும் பெயர் உனக்கே தகும். உன் சௌரியத்தை நேரிற் காணவேண்டியே உன்னை எதிர்க்க முற்பட்டேன். உன் ஆற்றலையும், தைர்யத்தையும் மெச்சினேன். இனி நம்மிருவர்க்கும் வைரம் வேண்டாம்' என்று கூறிச் சமாதானத்துக் கிசைந்தவன்போல் நடித்தான். சோழனது மோசக் கருத்தை அறியாத திருமங்கைமன்னன் யுத்தந் தவிர்ந்திருக்கையில், இதுதான் தகுந்த சமயமென்று கண்டு சோழன் அவரைத் தன்

மந்திரிகள் வசம் ஒப்புவித்துவிட்டான். சோழன் தம்மைத் தந்திரத்தால் வெல்லத் தீர்மானித்ததைச் சிறிதும் அறியாத ஆலிநாடர், தம் செயலிழந்து மந்திரியின் வசப்படவே, அமைச்சரும் அவரை எளிதிற் சிறை கொண்டு சென்று கோட்டத்தில் அடைத்துத் துன்புறுத்தினர்.

7. எம்பிரான் திருவருள்

ஆழ்வார் ஆகாரங் கொள்ளாது அச் சிறையில் மூன்றுநாள் பட்டினி கிடந்து, **அகதிக்கு இரங்கும் அருள் வள்ளலாராகிய கமலக்கண்ணன்** கழலிணையை இடையறாது சிந்தித்துக்கொண்டிருந்தார். தமது பக்தனொருவன் உடல் மெலிந்து அரற்றும் கூப்பாட்டினைக் கேட்டு அருளுருவாகிய பிராட்டியார் நம்பி யெம்பெருமான் அநுமதிபெற்றுத் தீம்பாலும், திவ்வியான்னமும்கொண்டு ஆழ்வார் எழுந்தருளி யிருந்த சிறைக்கோட்டம் வந்து அவரைத் தமது அமுத வாக்கால் தேற்றித் தாம் கொணர்ந்த அமுதையும், பாலையும் அவருக்கு ஊட்டி உபசரித்தார். **சர்வலோக மாதாவாகிய அம்மையார்க்குத் தம்முயிர்க ளிடத்துத் தோன்றும் அன்புதான் என்னே! அன்பர்க் கிரங்கி நலமளிக்கும் அருங் குணத்தை என்னேன்று வியப்பது!** தேவியார் தமது கருணைத் திருமேனி கொண்டு தினந்தோறும் தமது கரத்தில் தீம்பாலும், பிரசாதமுந் தாங்கி ஆழ்வார்க்குச் சேவை சாதித்து அவர் உடல் இளையாமற் பாதுகாத்து வந்தார். ஆழ்வாரும் வாஸுதேவனது பாதபங்கயங்களில் அழுந்திய சிந்தையராய்த் துன்ப மறியாமல் இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் பெரியபெருமாளையும், திருவேங்கடமுடையானையும், பேரருளாள

ரையும் தியானித்துத் துயர்நீங்கி யிருக்கையில், ஒரு நாள் இரவு முழுமுதற் கடவுளான பேரருளாளர் ஆழ்வாரது கனவிற்றோன்றி, 'அன்பனே! அஞ்சற்க! பேரருளாளன் அருள் பெற்றுக் கவலை யொழிவாயாக! உடனே காஞ்சிபுரம் புறப்பட்டு வந்தாயாகில் நீ விரும்பிய பணம் கிடைக்கும். சோழனது கடனைத் தீர்த்து விடலாம்' என்று ஆஞ்ஞாபித்தருளினார்.

பொழுது புலர்ந்ததும் அரசன் ஏவலாளர் சிறைக்கோட்ட மடைந்து ஆழ்வாரைக் கண்டு, 'பணத்துக்கு என்ன சொல்லுகிறீர்? நீர் இட்ட தவணை நாட்கள் கழிந்தன. சோழனுக்கு நாங்கள் என்ன பதில் அளிப்போம்?' என்று கூறி அவரைத் துன்புறுத்தத் தொடங்கினர்.

ஆழ்வார், பெருமாள் நியமித்தருளியபடியே அவர்களை நோக்கி, 'ஐயன்மீர்! நான் காஞ்சிபுரத்தில் ஆபத்தனமாகச் சிறிது பொருள் சேமித்து வைத்திருக்கிறேன். நீங்கள் என்னுடன் காஞ்சீபுரத்திற்கு வருவீர்களாயின் அரசன் கடனைத் தீர்த்து வைக்கிறேன்' என்று கூறினார். அவர் கூறிய மறுமொழியை அவர்கள் அரசனிடம் விண்ணப்பித்துக் கொள்ளச் சோழன், 'அவன் கூறுவதன் உண்மையை ஆராய்ந் தறிவோம். அவனைக் காவலிட்டுக் காஞ்சீபுரங் கூட்டிச் செல்லுங்கள். அவன் தப்பி ஓடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்' என்று தன் மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான்.

திருமங்கையாழ்வார் சோழனது பரிஜனங்கள் தம்மைப் பின்தொடரக் காஞ்சீபுரம் போய்ச்சேர்ந்தார். பின்னர் ஆழ்வார் பணங் கிடைக்குமிடந் தேடி யலைந்தும்

திரவியத்தைப் பெறாமல் வருந்திக் கிடந்தார். மனக் கலக்கமுற்றிருந்த ஆழ்வாரின் கனவில் **வரந்தருவார்** எழுந்தருளி 'ஆலிநாட! வேகவதீ நதி தீரத்திற் சென்று தேடினால் புதையல் இருக்குமிடமறிவாய்' என்று பிரஸாதித்து இடத்தை அடையாளத்துடன் குறிப்பிட்டருளினார். ஆழ்வார் விழித்தெழுந்து அதி சந்துஷ்டராய்த் தம்முடன் வந்த சோழனது ஏவலாளருடன் குறிப்பிட்ட இடஞ்சென்று தேடிப்பார்க்கையில் நிதிக்குவை இருக்கக் கண்டு களிப்படைந்தார். அரசனுக்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்தி, எஞ்சியதை முன்போலவே ஸ்ரீவைஷ்ணவர்களை ஆராதிப்பதிற் செலவிட்டு வந்தார்.

சோழனது பணியாளர் ஆழ்வாரை நோக்கி, 'உம்முடன் இவ்வளவு தூரம் அலைந்து திரிந்த எங்களை முடிவில் வெறுங்கையராய் அனுப்புதல் தகுதியோ? எங்கள் சிரமத்திற்குத் தக்க கைம்மாறின்றி இவ்விடம் விட்டகலோம்' என்று அவரை நெருக்கத் தொடங்கினர். கையில் இருந்த திரவியத்தைப் பாகவதர்க்குச் செலவு செய்துவிட்டமையின் ஆலிநாடர் அவர்களுக்கு என்ன பதிலளிப்பதென்று தெரியாமல் மனம் வருந்தினார். **தம் மடியார்தம் மேய் யடியாரான ஆழ்வாரின் பாகவத பக்திக்குப் பெரிதும் களிப்படைந்த பரமபத நாதன்** மீண்டும் அவரது கனவில் தோன்றி, 'அன்பனே! மனங் கலங்கல்; சோழனது சேவகரை அழைத்துச் சென்று வேகவதீ நதியின் மணலை அவர்களுக்கு அளந்துகொடு. அம்மணல் அவர் கண்ணுக்குச் சிறந்த நெல்லைப்போல் தோன்றும்' என்று அநுக்கிரகித்தார்.

ஆழ்வாரும் கடவுளின் திருவருட்டிறத்தை வியந்து நியமனப்படியே இராஜ சேவகரை விளித்து, 'நீங்கள்

என்னுடன் வருவீர்களாயின் உமது சிரமம் வீணுகாமல் தகுந்தபடி பரிசளிக்கத் தடையில்லை' என்று கூறி, அவர்களை நதி தீரத்திற்கு அழைத்துச் சென்ருர். சென்று அவ் வாற்றுமணலைச் சிறந்த தானியமென்று சொல்லித் திரட்டி அளக்கச் சேவகரும் அவர் சொல்லியபடி அது முதல்தரமான நெல்லாயிருக்கக் கண்டு களிப்படைந்து அதைப் பெற்று ஆழ்வாரின் மகிமையைக் கொண்டாடிக்கொண்டே அவரிடம் விடைபெற்றுச் சென்ருர்கள்.

சோழனிடம் சென்று சேவகர்கள் ஆழ்வார் செலுத்திய பகுதிப்பணத்தைச் செலுத்தி அவருடைய மகிமையை எடுத்துக் கூறினுர்கள். அதுகேட்டு அரசன் ஆச்சரியமடைந்து, ஆழ்வாரின் பிரபாவத்தைக் கொண்டாடி, 'அவர் ஒரு மகாநுபாவர். அவரிடம் அபசாரப்பட்டதற்குக் கழுவாய் இன்னதென்றறியேன். அப் புனிதரை ஆராயாது கடிந்த என் செங்கோன்மை இருந்தவாறென்னே! பாவியேன் உய்வது எங்ஙனம்?' என்று மனங்கசிந்து உருகி, ஆழ்வாரைத் தேடிச் சென்று, அவர் திருவடிகளைப் பணிந்து, 'பேதையேன் பிழையைப் பொறுத்தருளல்வேண்டும். அறிவிலியாகிய யான் தேவரீரது பெருமையைச் சிறிதும் அறியாதவனுனேன். என்னை மன்னிக்கவேண்டும்' என்று பிரார்த்தித்து நின்ருன். ஆழ்வார், 'யாவும் எம்பெருமான் திருவருளேயாதலின் நீர் வருந்தவேண்டாம்' என்று ஆறுதல் கூறினுர். அரசனும் அவரிடம் தான் பெற்ற பொருளனைத்தையும் அடியார்களுக் கிட்டுப் பிறவிப் பெரும்பயன் பெற்றுப் பேரின்ப மடைந்தான்.

8. ஆழ்வார் வழிபறித்தல்

சோழன் கடனைச் செலுத்தியபின் ஆலிநாடர் தினந் தோறும் ததீயாராதனத்திற்காகக் கடவுள் அருளிய அருநிதி அனைத்தையும் அதன் பொருட்டே வரம்பின்றிச் செலவிட்டு முடிவில் கையில் தனமிலராய்த் திருமாலுக்கடிமை செய்யவும், அடிமை செய்வாரை ஆராதிக்கவும் வழியறியாது கலங்கிக் கிடந்தார். வழியிற்செல்லும் பிரயாணிகளை மடக்கிக் கொள்ளையிடுவாரைப் போல், ஆலிநாடரும், **நீர்மேல் நடப்பான், நிழலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன்** என்னும் பெயர்களையுடைய நால்வரையும் துணையாகக் கொண்டு, பாதசாரிகளாய்ச் செல்வோரைத் தாக்கி, அவரது திரவியத்தை அபகரித்து, அங்ஙனந் தாம் சம்பாதித்த தனத்தைக்கொண்டு பாகவதர்க்கு வழக்கம் போல் அன்னமிட்டு உபசரித்து, களிப்புடன் காலம் கழித்து வந்தார்.

ஆழ்வார்க்குப் பக்தர்களிடமுள்ள அன்பினைக்கண்டு பேருவகைகொண்ட ஆதியஞ்சோதியாகிய அருட்பெருங் கடவுள் ஆலிநாடரைத் தடுத்து ஆட்கொண்டருளத் திருவுள மிரங்கினர். லீலைகளில் வல்ல மாயவன் பிராட்டியுடன் ஓரந்தண வடிவந் தாங்கி மணக்கோலம் கொண்டேகும் வதூவரர்களைப் போல், ஆழ்வார் தம் நண்பருடன் கரந்துறையும் கானவழியே சென்றனர். பட்டாடையுடுத்து மணிநகை பூண்டேகும் மணமகனையும், மகளையும் கண்டு களிப்புற்று, ஆழ்வார், "ததீயாராதனம் எப்படி நடக்கும் ?' என்று கலங்கியிருந்த என்னிடம் இரங்கிப் பரந்தாமனே இத் தம்பதிகள் என் கண்முன் வரும்படி அருள் புரிந்தனன் போலும் ! என்னே

அவனது கருணை! பகவானுக்குத் திருவுளம் என் விஷயத்தில் பூர்ணமாயுள்ளபோது எனக்குக் குறையு முண்டோ? இவர்களை மடக்கி இவர்களிடமிருந்து பெறும் நகைகளையும், ஆடைகளையும் விற்றுப் பாகவதரை உபசரிப்பேன்" என்று தீர்மானித்தார். உடனே அவர் தம் தோழருடன் மறைந்திருந்த இடத்தினின்றும் வெளிப்பட்டு மணக்கோலத்துடன் செல்லும் இருவரையும் சூழ்ந்துகொண்டார்.

9. பகவான் ஆழ்வாருக்கு உபதேசித்தல்

ஆலிநாடர் அவர்களுக்குரிய எல்லா ஆபரணங்களையும் அபகரித்துப் பின் மணமகன் காலில் அணிந்திருந்த ஓராபரணத்தை எடுக்க முயன்றார். எவ்வளவு நேரம் சிரமப்பட்டும் அதைக் கையினாற் கழற்ற முடியாமற் போகவே ஆலிநாடர் அதைப் பொறாராய்த் தமது பல்லினாற் கௌவி அவ் வணிகலன்களை கைக்கொண்டார். ஆழ்வார் வெகு மிடுக்குடன் செய்த இவ் வேலையைக் கண்டு எம்பெருமான் சிற்றங் கொள்ளாது 'கலியனே' என்று நாமமிட்டழைத்தார்.

அங்ஙனம் ஸ்ரீமந் நாராயணன் தரித்து வந்த ஆடை யாபரணாதிகளைத் திருவாலிநாடர் ஒன்றாகச் சேர்த்து, பெரும் சுமையாகக் கட்டி அதைத் தூக்கத் தொடங்கினார். ஆனால், பகவத் ஸங்கல்பத்தால் அம் மூட்டை நிலத்தினின்றும் நிலை பெயராது மலைபோல் கனத்திருந்தது. ஆலிநாடர் அதைக் கண்டு மிகவும் வியப்புற்றவராய் அவ் வேதியரே அம் மாயம் புரிந்தாரென்று நினைத்து அவரை நோக்கி, "ஓய்! பிராமணா! இது நீ செய்த மாயமென்று அறிவேன். நான் அம்

முட்டையைப் பெயர்த்தெடுக்க முடியாதபடி நீ செய்த மாயமென்னை? அதனை உடனே சொல்வாயாக. சொல்ல மறுப்பின் நீ என் வாளுக்கு இரையாவது நிச்சயம்" என்று பயமுறுத்தினார்.

அப்போது மாயவன் ஆலிநாடரைக் குளிர நோக்கி, 'நான் செய்த மாயம் இன்னதென்று அறிவிப்பேன்; என் அருகில் வாரும்' என்று கூறி, அவரை அழைத்துக் கொண்டு தனியிடஞ் சேர்ந்து அவருக்கு அஷ்டாக்ஷர மகாமந்திரத்தை உபதேசித்து பெரிய திருவடியின்மீது லக்ஷ்மீ சமேதராய்த் தமது உண்மை வடிவுடன் சேவை சாதித்தார். ஆலிநாடர் தம் பேற்றினை நினைந்து நினைந்து உள்ளம் நெக்குருகவும், கண்களினின்று ஆனந்த வருவி சோரவும், கரங்கள் தாமே சிரமிசைச் சென்று குவியவும், உடல் ரோமம் சிலிர்க்கவும் ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார். தம்முன் நின்ற கருணை

வள்ளலின் மூர்த்தத்தை மனமாரச் சேவித்து, 'பெருமானே! தேவரீரது மகிமை யறியாமற் பாவியேன் ஆராயாது செய்த பெரும் பிழையினின்றும் எங்ஙனம் தப்பி உய்வேன்? தேவரீரது கருணைத் திறனை என்

னென்று வியப்பேன்? என்னை வலியவந்து ஆட்கொண் டருளிய வள்ளலே! இன்றன்றோ இருள் நீங்கி விளக் கம் பெற்றேன்! வேதப்பொருளை அறிந்தேன்! பிறவிப் பெருங் கடலைத் தாண்டும் புணையைக் கண்டேன்! மும் மைப் பலனையும் பெற்றவனானேன், தேவரீரது அரு ளால் மந்திரங்களுட் சிறந்த மகா மந்திரோபதேசம் பெற் றேன்!" என்று பலவாறாகத் துதித்துக் களிப்புற்றார்.

ஆதியஞ் சோதியாகிய கமலக் கண்ணனைக் கண் ணாரக் கண்ட ஆலிநாடரின் மனம் அனலிடைப்பட்ட மெழுகென உருகியது. அவருக்கு உண்டான ஆனந் தம் உள் ளடங்காமல் மேலிட்டுப் பெருக்கெடுத்தது. அதனால் அவர் ஆசு, மதுரம், சித்திரம், விஸ்தாரம் என்னும் நால் வகைக் கவிகளாலும் எம்பெருமானின் திவ்ய குணங்களைப் பாடத் தொடங்கி, **பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்** என் னும் ஆறு அழகிய பிரபந்தங்களையும் அருளிச்செய்தார். இவையே நம்மாழ்வார் அருளிச்செய்த நான்கு பிரபந் தங்களுக்கும் அங்கங்களாய்ச் சிறப்புற்று விளங்குகின் றன. அதனால் ஆலிநாடர்க்கு **'நாலுகவிப்பெருமாள்'** என்று பெயர் வழங்கலாயிற்று.

10. ஸ்தல யாத்திரை

பின்னர் ஆழ்வார் திவ்ய தேச யாத்திரை செய்யத் திருவுள்ளங் கொண்டார். அவர் வடக்கு நோக்கிப் புறப்பட்டுத் **திருப்பிருதி, பதரிகாச்சிரமம், சாளக்கிராமம், நைமிசாரண்யம், சிங்கவேள்குன்றம், திருவேங்கட** மென்னும் தலங்களைத் தரிசித்துப் பின் தொண்டை நாட்டுக்கெழுந்தருளினார். **திருவெவ்வுளூர், திருவல்லிக்**

கேணி, திருநீர்மலை, திருக்கடன்மல்லை முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள எம்பெருமான்களைச் சேவித்து ஆனந்தமடைந்தார். திருவெவ்வுளூரில் வீரராகவனைச் சேவித்துக்கொண்டு ஆழ்வார் திருநின்றவூருக் கெழுந்தருளினார். அத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் பத்தராவிப்பெருமாள் ஆழ்வாருக்குச் சேவை சாதித்திலர். ஆலிநாடர் அங்கு நின்றும் புறப்பட்டுத் திருக்கடன்மல்லைக்கு வந்து தலசயனத்துறைவாரைச் சேவித்தார். அப்போது பத்தராவிப்பெருமாள் ஆழ்வாரின் திருவாயால் பாடல்பெறத் திருவுள்ளங்கொண்டு திருநின்றவூரை விட்டுத் திருக்கடன்மல்லைக்கு எழுந்தருளி அழ்வாருக்குச் சேவை சாதித்தார். ஆலிநாடரும் பத்தராவிப் பெருமாளைச் சேவித்து,

'நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலைக்
காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக்
கண்டதுநான் கடன்மல்லைத் தலசயனத்தே'

என்று தாம் தலசயனத்தார் விஷயமாகப் பாடிய பதிகத்துப் பத்தராவிப் பெருமாளையும் பாடிக் களிப்புற்றார்.

11. சம்பந்தர் ஆழ்வாரைக் கௌரவித்தல்

அப்பால் திருமங்கையாழ்வார் மற்று முள்ள தொண்டை நாட்டுத் திருப்பதிகளையும், நடுநாட்டுத் திருப்பதிகளையும் சேவித்துக்கொண்டு சோழநாடடைந்தார். சோழ நாட்டில் ஆழ்வார் தமது பரிஜனங்களுடன் சீகாழிக்கருகே வந்துகொண் டிருந்தார். அப்போது அவரது சீடர்கள் வழக்கம் போல், 'நாலுகவிப் பெருமாள் வந்தார்! நம் கலியர் வந்தார்! ஆலிநாடர் வந்தார்! மங்கை வேந்தர் வந்தார்! பரகாலர் வந்தார்!' என்று பல விதமாக விருதுகள் ஊதிக்கொண்டு சென்

ருர்கள். சீகாழியில் திருஞானசம்பந்தரென்னும் பெய ரினையுடைய சிவனடியார் ஒருவர் பெருமை பெற்று விளங்கினர். சைவ சமயாசாரியருள் அவர் ஒருவர். அவரது சீடர் ஆலிநாடரைக் குறுக்கிட்டு அவருடன் வந்தவரை நோக்கி, 'எம் ஆசாரியர் உள்ள விடத்து நீங் கள் ஆலிநாடரைப் பற்றிச் சிறப்பித்துக் கூறிச் செல் லல் தகுதியோ? சம்பந்தப்பெருமான்முன் ஆலிநாட ரின் கவித் திறமை எங்ஙனம் செல்லும்? எம் சம்பந்த சுவாமிகள் ஆலிநாடரின் கவித்துவத்தை அங்கீகரித்தா லன்றி நீங்கள் அங்ஙனம் விருதுகள் ஊதிச் செல்ல லாகாது' என்று கூறினார்கள்.

ஆழ்வார் தமது பெருமை விளங்கக் கவியொன் றைப் பாட ஆரம்பித்தார். அவரிடம் அச் சமயத்தில் எம்பெருமான் விக்கிரகமில்லாதிருந்ததனால் அவரு டைய வாக்குக்குத் தடையேற்பட்டது. அவருக்குக் கவி பாடும் வல்லமை தெய்வத்திருவருளாற் கூடியது. அவர் தமது முயற்சியால் அதைப் பெற்றவரல்லர். பகவானுடைய விக்கிரகமில்லாமையால் தமது வாக் குக்குச் சோர்வு உண்டாயிற்றென்று உணர்ந்தார். உடனே அவர் அவ்வூரிலிருந்த ஒரு வைணவ மாதி னில்லத்திலிருந்து அவள் ஆராதித்துவந்த எம்பெரு மானை எழுந்தருளப்பண்ணி அப் பெருமான் திரு வருளாற் கவி பாடும் சக்தியைப் பெற்றுச் சீராம விண்ணகரத்தில் எழுந்தருளியிருக்கும் தாடாளப்பெரு மானைச் சிறப்பித்துப் பதிகம் பாடினார்.

சம்பந்தரது சிஷ்யர் ஆழ்வார் பாடிய பாசுரங்களைக் கொண்டுபோய்த் தம் ஆசாரியரிடங் காட்டினர். சம் பந்தரும் அப் பாடல்களில் அமைந்திருந்த பொரு

ணயத்தையும், சொன்னயத்தையும் கண்டு அதிசயித்து ஆழ்வாரைப் பெருமைப்படுத்திக் கொண்டாடி, 'நாலு கவிப் பெருமாள் என்னும் பேர் அவர்க்குச் சாலவும் பொருந்தும்' என்று கூறித் தம் கருத்தை வெளியிட்டார்.

12. பெரியபெருமாள் நியமனம்

பின்னர் திருமங்கையாழ்வார் மிக்க சிறப்போடு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் **திருவாலி திருநாங்கூர்** முதலிய திருப்பதிகட்குச் சென்று **திருவிந்தளூரை** அடைந்தார். அவ் வூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஆழ்வாருக்கு ஒருமுறை சேவை சாதித்து உடனே மறைந்தருளினார். ஆழ்வார் அப்பெருமானைத் திரும்பவும் சேவிக்க விரும்பி, **'வாசி வல்லீ ரிந்தளூரில் வாழ்ந்தேபோம் நீரே'** என்று பாடிப் பிரார்த்தித்தார். அவரது பிரார்த்தனைக்கு இணங்கிப் பரமனும் தம் அடியவர்க்குத் தமது திவ்விய உருவத்தைக் காட்டியருளினார். ஆழ்வார் இந்தளூர்ப் பெருமானைத் தரிசித்து அங்கு நின்றும் புறப்பட்டுக் **'கோயில்'** என்று சிறப்பித்துக் கூறப்படும் **திருவரங்கப்** பெருநகர்க்கு வந்து சேர்ந்தார். அரவணைமேற் பள்ளிகொண்டருளும் அழகிய மணவாளரைச் சேவித்து ஆநந்தத்தில் மூழ்கியிருக்கையில் அக் கடவுள் ஆழ்வாரைக் குளிர நோக்கியருளி, 'அன்பனே, நீ எமக்குப் புதியவிமானமும், மண்டபமும், கோபுரமுங் கட்டித் திருத்தொண்டு புரிந்து வருவாயாக' என்று அநுக்கிரகித்தார். திருமங்கை மன்னனும் கடவுளின திருவருளை வியந்து மனமுவந்து அப் பெருமானுக்குத் தொண்டு செய்வதற்கு முற்படுவாராயினர்.

13. ஆழ்வார் பொருள் தேட முயலுதல்

ஆலிநாடர் தமது அந்தரங்க நண்பர் நால்வரோடுங் கூடி ஆலோசிக்கத் தொடங்கி, அரங்கன் கோயில் திருப்பணியைக் குறைவின்றி முடிக்கும் விரகு யாதென்று ஆராய்வாராயினர். தம் கையில் திரவிய மின்மையால் செய்யும் வகை யறியாது கலங்கிக்கொண் டிருந்த ஆழ்வாரை நோக்கி அவரது அமைச்சர், 'ஸ்வாமி, தேவரீர் இதற்காக மனம் வருந்த வேண்டாம்; நாகபட்டினத்தில் புத்தர் கோயிலொன்றுண்டு. அக் கோயிலிலுள்ள புத்தச்சிலை சிறந்த பொன்னாற் சமைந்தது. நாம் சென்று அவ் வாலயத்துட் பிரவேசித்து அச்சிலையைக் களவாடி வந்தோமாயின் நினைத்திருக்கும் கைங்கர்யம் இனிது நிறைவேறும். அச் சிலையைப் பின்னப்படுத்தி அளவற்ற செல்வம் பெறலாம்' என்று விண்ணப்பம் செய்தனர். ஆழ்வாரும் அவர்களுடைய சமயோசித அறிவினை வியந்து கொண்டாடினர். அவர் அந்நால்வருடனும் புறப்பட்டுச் சென்று நாகபட்டினத்தை அடைந்தனர்.

14. இயந்திர ரகசியமறிதல்

ஆழ்வார் அந்நகரைச் சுற்றித் திரிந்து தம் தோழருடன் ஓரம்மையாரின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். அவர் அவளுடன் தந்திரமாய் உரையாடிக் கொண்டே வந்து அந் நகரின் பெருமையைப் பற்றிக் கூறும்படி அவளை வேண்டினர். தேசாந்திரிகளாகிய அவர்க்கு அவ் வம்மையாரும் நகரின் வளங்களையும் சிறப்பையும் பற்றிப் பேசிக்கொண்டே வந்து ஆங்குள்ள புத்தர் கோயிலைப்பற்றிக் கூறத் தொடங்கினள். அவள் அவர்களை நோக்கி, 'இக் கோயில், மற்றக் கோயில்களைப்போலக்

கட்டப்பட்டதன்று. இதைக் கட்டி முடிப்பதற்குப் பல வருஷங்கள் சென்றன. கடல்களுக் கப்பாலுள்ள ஒரு தீவிலிருந்து விசுவகர்மாவை யொத்த தொழில்வல்ல கம்மியன் ஒருவனை வரவழைத்து அவனைக் கொண்டு இப்பெருங் கோயிலைக் கட்டி முடித்தனர். இதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை கொஞ்சமன்று. இக் கோயில் விமானத்தையும், இதனுள் பிரதிஷ்டை செய்துள்ள விக்கிரகத்தையும் செய்து முடித்தற்கு ஏற்பட்ட சிரமத்தை இவ்வளவென்று சொல்லி முடியாது. இந்த விக்கிரகமோ மாற்றுயர்ந்த சீரிய பொன்னால் ஆக்கப்பட்டு, அழகு பெற்றுச் சிறந்து விளங்குகிறது' என்று கூறினள்.

அவள் உரைத்தவைகளைச் சாவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த திருவாலிநாடர் அவளை நோக்கி, 'நீர் கூறுவதுபோல் அத்துணைச் சிறப்புற்றிருக்குமாயின் கள்வர் பலர் அதனைக் கவர்ந்து செல்ல வழிதேடுவரன்றோ? கள்வரால் அபகரிக்கப்படாதபடி அரசன் அப் பொற்சிலையை எங்ஙனம் காவல் காத்து வருகிறான்?' என்று வினவினர்.

ஆலிநாடர் கூறியதற்கு விடையாக அம்மையார், 'இவ் விமானத்தைக் கட்டிய கம்மியன் சாமானிய திறனுடையவ னல்லன். அவனது ஆற்றலை என்னென்று கூறுவது? அவன் கண்டோர் வியப்புறும் வேலைப்பாட்டுடன் விளங்கும் ஓர் அற்புத இயந்திரம் அமைத்திருக்கிறான். அது சதா சுற்றிக்கொண்டேயிருக்கும். இவ் வாலயத்துள் நுழைய வேண்டின் அச் சக்கரப் பொறியை நிறுத்திய பின்னரே செல்ல இயலும். ஆயினும் அதன் வேகத்தை நிறுத்த முயல்வோர் உயிர்துறத்

தல் நிச்சயம்; அதனாலேயே இதுவரை ஒருவரும் கோயிலுள் நுழைய முயன்றிலர். ஒருவருக்கும் அவ்வித எண்ணம் இதுகாறும் உதித்ததே யில்லை' என்று பகர்ந்தனள்.

ஆலிநாடர் மகிழ்வுற்று மீண்டும் அவளை நோக்கி, 'அவ்வளவு திறமை வாய்ந்த கம்மியனும் உலகிலுளனோ? அவனது உதவி கிடைக்குமாயின் எமது நாட்டிலும் இதற்கு நிகரான கோயிலொன்றை நிருமித்து முடிக்கலாம். அவன் பெயர் யாது? அவன் உறையும் பதி யாது? நீர் இவ் விவரங்களை அறிவீரோ?' என்று வினவினர்.

அப் பெண்மணியும் கம்மியனிருக்குந் தீவின் பெயரையும் அவனது அங்கவடையாளங்களையும் தானறிந்த அளவு கூறி முடித்தாள். ஆலிநாடரும் அகமகிழ்ந்து அவளிடம் விடை பெற்றுக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டார்.

15. பாக்கு வியாபாரியை ஏமாற்றிப் பணம் பறித்தல்

ஐவரும் கலங்கொண்டு கடல் கடந்து சென்று அத் தீவுமுழுவதும் மலைந்துதிரிந்து கம்மியன் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்தனர். அவர்கள் இல்லத்துள் நுழைந்து நோக்குகையில் கம்மியன் போஜனம் செய்து கொண்டிருத்தலை அறிந்தனர். பின் அவர் யாது மறியாதவர் போல் அவ்வீட்டு இடை கழியில் நின்று கொண்டு தமது நண்பர்களை நோக்கி, 'நாகபட்டினத்திலுள்ள புத்தர் கோயிலினின்றும் சிலையைச் சில துரோகிகள் அபகரித்துச் சென்றனரே! அவ் விஷயத்தை இவ்

வீட்டுக் கம்மியன் அறிவானாயின் மிகவும் வருந்துவா னன்றோ? கோயில் விமானத்தையும் பொற்சிலையையும் செய்து முடிப்பதற்கு இவன்பட்ட சிரமமெல்லாம் வீணா யிற்றே! ஐயோ பாவம்! இவன் அது இவ்வளவு சீக்கி ரத்தில் கள்வர் வசப்படுமென்று சிறிதும் எதிர்பார்த் திருக்கமாட்டா னல்லவா? இச் செய்தியைக் கேள்வியுற் றால் அவனது ஆவியும் உடலில் தரியாதே! என் செய் வான்!' என்று மிகவும் வியப்புற்றவர்போலக் கூறினார்.

இவர் இப்படிப் பேசிக்கொண் டிருக்கும்போது தன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கம்மியன் வெளியேவந்து நோக்கினான். நோக்குகையில் இடை கழியில் ஆழ்வார் தன்னைப் பற்றிக் கூறிய மொழிகளை அங்கு நின்றபடியே கேட்டுக்கொண் டிருந்து தன் வேலை வீணானமைக்கு வருந்தித் துக்கத்திலாழ்ந்து அவர் முன் வந்து நின்று, 'உங்களுக்கு இச் செய்தியைக் கூறிய வர் யார்? நான் பிறர் அறியலாகாவண்ணம் செய்து வைத்திருந்த சூத்திரத்தைக் கண்டுபிடித்தவன் மிகவும் கெட்டிக்காரனா யிருத்தல் வேண்டும். நான் அச் சூத் திரத்தை ஜலதாரையின் கீழ்க்கல்லினுள் ஓரிரும்பாணி யில் அமைத்திருந்தேனே! இனி என்செய்வேன்! என் பேரும் புகழும் இன்றோடு கழிந்தனவே' என்று கதறி வருந்தினான்.

பின்னர், திருவாலிநாடர் அக் கம்மியனைச் சாந் தப்படுத்தி அவ்விடம்விட்டுத் தம் தோழருடன் புறப் பட்டுக் கடற்றுறைக்கு வந்துசேர்ந்தார். அவர் சமய யோசிதமாய் நடந்து தம் காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் மிகுந்த ஆற்றலுள்ளவர். அவர் தெய்வத் தொண்டு புரிவதில் ஊக்கம் நிறைந்தவராய் நாகபட்டி

னுஞ் செல்ல நிச்சயித்துக் கடற்கரையை அண்டி நிற்கையில் பாக்கு வியாபாரி ஒருவனைக் கண்டார். ஆலிநாடர் அவனைக் கண்டு, "நீர் சரக்கேற்றிச் செல்லுங் கப்பலில் எம்மையும் கூட்டிச் செல்லும்" என்று வேண்ட, அவ் வணிகனும் அவரது விருப்பத்திற்கிசைந்து தோழருட்பட அவரைத் தன் மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டான்.

அப்போது ஆலிநாடர் கொட்டைப் பாக்கொன்றை யெடுத்துச் சீவிப் பாதியாக்கி வணிகனது பாக்கு மூட்டையில் அதனையுஞ் சேர்த்து அவனை நோக்கி, 'ஐயா, வணிகரே! நானும் உமது சரக்கில் பாதிப் பாக்கு சேர்த்திருக்கிறேன். கலம் கரை சேர்ந்ததும் அதை என்னிடம் திருப்பிக்கொடுப்பதாக முறிச்சீட்டு ஒன்று எழுதிக் கொடும்' என்று கேட்டார். வியாபாரியும் அவருடைய வார்த்தைக்குக் குறுக்குப் பேசாமல் ஒரு சீட்டில், 'என் கப்பலிலே பாதிப் பாக்கு உமது' என்று எழுதிக் கொடுத்தான். கப்பலும் புறப்பட்டுச் சில தினங்கட்கு அப்பால் நாகபட்டினத் துறைமுகத்தை அடைந்தது.

அடைந்ததும், ஆலிநாடர் கப்பற்காரனை நெருங்கி, 'உமது சரக்கில் எனக்குச் சேரவேண்டியதைக் கொடும்' என்று நிர்ப்பந்தித்தார். கப்பற்காரன் அவன் முன்பு சேர்த்திருந்த பாதிப் பாக்கைத் தேடி யெடுத்துக் கொடுக்க, மங்கைமன்னன் அதைப் பெற்றுக்கொள்ளச் சம்மதியாமல் கோண வழக்கிட்டுப் பேசத் தொடங்கினார். 'ஐயா செட்டியாரே! நீர் எழுதிக் கொடுத்த சீட்டிலுள்ளபடி நடக்கக் கடமைப்பட்டிருக்கிறீர். உமது பாக்கிற் பாதி எனக்குச் சேர வேண்டுமே!

அப்படியிருக்க, ஒரு துண்டுப் பாக்கை எடுத்துக்கொடுத்து என்னை ஏய்க்கப் பார்க்கிறீரே! மொத்தத்தில் பாதியைக் கொடுத்தாலன்றி நான் உம்மை விடேன். உம்மை நீதி மன்றத்துக்கிழுத்துச் சென்று இராஜ தண்டனைக்கு உட்படுத்துவேன். அந்தச் சீட்டை நீரே எடுத்துப் படித்துப் பாரும்' என்று சொல்லி அதை அவனிடம் கொடுத்தார். உடனே அத் துறையிலிருந்த பல வியாபாரிகள் வந்துகூடி அவர்கள் வழக்கைக் கேட்டுப் பின் அவ் வியாபாரியை நோக்கி, 'உன் கைப்பட எழுதப்பட்டிருக்கும் முறிச்சீட்டின்படி நீ நடக்க வேண்டியவ னன்றோ? உனக்கு அப் பாக்கில் பாதிக்கே உரிமையுண்டு. மிகுதியை அவருக்குக் கொடுத்தலே முறை' என்று எடுத்துக் காட்டினர். வணிகனும், மேலொன்றும் சொல்ல நாவெழாமல் அப் பாக்கிற்குரிய விலையைத் திருமங்கைமன்னனுக்குக் கொடுத்து அவரிடம் விடைபெற்றுச் சென்றான்.

16. உபாயத்தால் புத்த விக்கிரகத்தைக் கவர்தல்

பரகாலரும் வணிகன் கொடுத்த திரவியத்தைக் களிப்புடன் பெற்று, தம் தோழரோடு நகரை நோக்கிச் சென்றார். செல்லுகையில் கண்டோர் வியப்புறும் வண்ணம் மிகவும் நேர்த்தியாகக் கட்டப்பட்டிருந்த அவ் வாலயத்தை ஆலிநாடர் கவனித்தார். அதன் வேலைப்பாட்டினையும் அழகையும் கவனித்து அதனுள் இருக்கும் விக்கிரகத்தை எப்படிக் களவாடலாம் என்று எண்ணினார். அவர் அஸ்தமன மானவாறே தம் தோழர்களுடன் அக் கோயிலுட் சென்று அங்கு ஒரு மூலையில் பதுங்கிக்கொண் டிருந்தனர். கோயிற் பூசாரிகள் பூசை முடித்துக் கோயிலைத் தாளிட்டு வெளியே சென்றனர்.

பின் நள்ளிருளானதும் ஆலிநாடர் கோமுகையின் கீழே உற்றுநோக்குகையில் இரும்பாணியொன்று சங்கிலியுடன் இருத்தலைக் கண்டார். அவர் தம் தோழரையும் துணைக்கொண்டு அச் சங்கிலியைப் பிடித்துத் தூக்கி மேலே ஏறி விமானத்திற்குச் சென்று சந்நிதிக்குள் நுழையத் தீர்மானித்தார். ஆயினும் அவ்விடத்தில் வழியில்லா திருத்தலைக்கண்டு அவர் மயங்கி நின்றனர். விமானத்தின் சிகரத்தில் சக்கர வடிவமாய் அமைந்துள்ள யந்திரம் ஒன்று வேகமாய்ச் சுழன்று கொண்டிருந்ததை அவர்கள் கண்டு அதிசயித்தனர். அதை நிறுத்தினல் உள்ளே புக முடியுமென்று அவர்கள் அறிந்துகொண்டு அதை எப்படி நிறுத்தலாமென்று சிறிது யோசித்தனர்; பின் ஆலிநாடர் தம் சீடர்களுள் ஒருவரை நோக்கி, ஒருவரும் பாரா வண்ணம் இரகசியமாய் நகர்க்குட்சென்று வாழைத் தோட்டத்தினின்றும் சில மரங்களை வெட்டிச் சாய்த்து அத் தண்டுகளைக் கொண்டு வரும்படி ஆஞ்ஞாபித்தார். அவ் வாணையைச் சிரமேல் தாங்கி அச் சீடரும் கடுகிச் சென்று ஊர் அடைந்து ஒரு தோட்டத்திலிருந்து வாழைத் தண்டுகளை வெட்டிக்கொண்டு வந்தார்.

உடனே ஆலிநாடர் வேகமாகச் சுழன்றுகொண்டிருந்த அந்த இயந்திரத்தின் சக்கரங்களினிடையில் தண்டுகளைக் கொடுத்துக்கொண்டே வர அப் பொறியும் வேகங்குன்றி முடிவில் சுழல்வதின்றி நின்றது.

அப்பால், ஆலிநாடர் தமது சீடர்களுள் ஒருவனைக் கூப்பிட்டு, 'நீ உள்ளே புகுந்து அங்கேயுள்ள புத்த சிலையைப் பெயர்த்தெடுப்பாயாக' என்று பணித்து அவனை உள்ளே அனுப்பினர். ஆலிநாடர் ஏவியபடியே சென்று



வேகமாய்ச் சுழலும் சக்கரத்தை
வாழைத்தண்டுகளைக் கொடுத்து நிறுத்தியது

அவன் அச் சிலையை நிலையினின்றும் பெயர்த்தெடுக்கத் தொடங்குகையில் அவ்வுரு அவன் கைக்குத் தப்பி நாலா பக்கங்களிலும் ஓடத் தலைப்பட்டது. அவன் அச்சிலை ஓடிய திக்கு முழுவதும் திரிந்தும் அது மந்திர வலிமையால் கைக்கு வசப்பட்டிலது. அவன் தன் முயற்சி பலியாததை ஆலிநாடர்க்குக் கூறி நிற்கையில், ஆழ்வாரும் அவ் வுருவத்தைக் கைப்பற்றுதற்குச் சாதனமாய் ஓர் உபாயத்தை எடுத்துக் கூறினார். அவர் கூறிய உபாயத்தைக்கொண்டே அச் சீடன் அவ்வுருவத்தின் மந்திர வலியைப் போக்கி அதனைத் தன் சுவாதீனப்படுத்திவிட்டான். வலி ஒடுங்கியபின் அச் சிலை, 'வலியற்ற என்னை ஈயத்தாலும், இரும்பினாலும், பூதத்தாலும், பித்தளையாலும், செம்பினாலும் பண்ணாமல் பொன்னாற் சமைத்ததென்னோ!' என்னும் பொருள்பட,

'ஈயத்தா லாகாதோ? இரும்பினா லாகாதோ?
பூயத்தால் மிக்கதொரு பூதத்தா லாகாதோ?
தேயத்தே பித்தளைநற் செம்புகளா லாகாதோ?
மாயப்பொன் வேணுமோ மதித்தென்னைப் பண்ணுகைக்கே?'

பாடி வியந்து கதறிக்கொண்டே கீழே விழுந்தது.

17. நில வழக்கு

உடனே ஆலிநாடரின் சீடன் அப் பொற்சிலையை எடுத்துக்கொண்டு வந்து தன் யஜமானரிடம் கொடுத்தான். ஆலிநாடரும் அதைப் பெற்றுக்கொண்டு ஒரு க்ஷணமுந் தாமதியாமல் தம் நண்பருடன் அங்கு நின்றும் புறப்பட்டு அந் நகர்க்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தை அடைந்தார். தாம் களவாடி வந்த விக்கிரகத்தைப் பத்திரமாய்ப் பாதுகாக்கவேண்டி அவ் வூரிலுள்ள ஒரு சேற்றுக் கழனியில் அதைப் புதைத்து வைத்தார்.

வைகறையில், அந் நிலத்துக் குரியவன் நாற்றுச் சுமைகளைத் தலையில் தாங்கிக்கொண்டு அங்கு வந்து அந் நிலத்தை உழத் தொடங்கினான். அப்போது ஆழ்வார் அவனைக் குறுக்கிட்டு, 'இஃது என் நிலமென்பதை நீ அறியாயோ? என் நிலத்தை நீ எப்படி உழலாம்?' என்று சொல்லித் தடுக்க அவ் வுழவன், 'நீர் யாவர்?' உம்மைக் கண்டாற் பித்தர் போலத் தோன்றுகிறதே! என் நிலத்தில் வந்து நின்றுகொண் டிருப்பதுமன்றிப் பகற் கொள்ளையிடுவார் போன்று அஃது உம்முடைய தென்று சாதிக்கவும் முற்படுகின்றீர்' என்று கூறி, அவரைப் பொருட்படுத்தாமலே உழ முயன்றான். உடனே ஆலிநாடர் தம் தோழரோடும் அவனைத் தாக்கி அவனது கலப்பையைத் தறித்துவிட்டனர். அவ் வுழவன் கூக்குரலிட்டுப் போராடத் தொடங்கினான். அதனால் இரு திறத்தார்க்கும் விவாதம் முதிர்ந்தது. ஆலிநாடர் சிறிதும் சலியாமலே அவனை நோக்கி, 'நீ இந்நிலத்தை உழ நான் சிறிதும் சம்மதியேன். இந் நிலம் உண்மையில் என்னுடைய தென்பதை நாளைத்தினம் பத்திரமூலமாக நிரூபித்துவிடுகிறேன். ஆகையால் அதுவரை நீ இங்கு வரலாகாது' என்று கூறினார். அவ்வுரை கேட்ட உழவன் அக் கோண வழக்கரிடம் சண்டையிட மனமில்லாமல் அவரை நோக்கி, 'சரி, நீர் கூறுவதுபோலவே செய்கிறேன். நாளையதினம் உமது வார்த்தை பொய்க்குமாயின் கழனி என்னுடைய தென்பதற்குச் சந்தேகமில்லை. நீர் என்னை மீண்டும் சண்டைக்கிழுக்க லாகாது' என்று சொல்லி அவரிடம் விடை பெற்றுச் சென்றான்.

ஆழ்வார் அவனது அறியாமைக்கு மிகவும் நகைத்து அவ் விரவு முழுவதும் அங்குத்தானே தங்கிப்

பொழுது புலர்ந்ததும் அச் சிலையைப் பூமியினின்றும் பெயர்த் தெடுத்துக்கொண்டு தம் தோழரோடும் அவ் விடம் விட்டுப் புறப்பட்டார். அவர்கள் **உத்தமர் கோயிலை** அடைந்து அச்சிலையை ஓரிடத்தில் பத்திரப் படுத்தி வைத்திருந்தனர்.

18. நாகபட்டினத்துத் தலைவரை வஞ்சித்தல்

நிற்க, நாகபட்டினத்துள்ள புத்தர் கோயிலினின் றும் பொற்சிலை களவாடப்பட்ட செய்தி மறுநாளே நகரெங்கும் பரவியது. அந்நகர பரிபாலகர் களவை எப்படியாவது கண்டு பிடித்துக் கள்ளனைத் தண்டித்து மீண்டும் அப் பொற்சிலையைப் பெற எண்ணி நாலா பக்கங்களிலும் தமது சேவகரை அனுப்பி யிருந்தனர். அச் சேவகரும் சிலையைக் கொண்டுசென்ற கள்ளரைத் தேடிப் புலம் விசாரித்து வருகையில், ஆலிநாடர் தம் சீடர்களுடன் புத்த விக்கிரகத்தைத் திருடிக்கொண்டு உத்தமர் கோயிலுக்குச் சென்றுவிட்டதைக் கேள்வி யுற்றனர். பின்னர், அச் சேவகர் உத்தமர் கோயி லுக்குச் சென்று திருமங்கை மன்னனையும் பிறரையுங் கண்டு அவர்களை வளைத்துக்கொண்டு, 'நீங்கள் களவாடி வந்த விக்கிரகத்தை எங்கே மறைத்து வைத்திருக் கிறீர்கள் ? அதை இப்போதே கொண்டுவந்து கொடுப் பின் உய்வீர்கள் ; அன்றேல் அதிகாரிகளின் தண்டனைக் குள்ளாகி வருந்தவேண்டிவரும்' என்று மிகவும் சீற்றங் கொண்டு நிர்ப்பந்திக்கத் தொடங்கினார்கள். பரகாலரோ அவர்களின் கூற்றைச் சிறிதும் பொருட்படுத்தின ரல்லர். அவர் அஞ்சா நெஞ்சம் படைத்த தீரரல்லரோ? அவர் அச் சேவகரை நோக்கி, 'உமது தலைவர் எங்களை

நேரில் வந்து கேட்டால் நாங்கள் அவருக்குப் பதிற் கூறுவோமேயன்றி உமக்குப் பணியமாட்டோம். நீங்கள் வந்த வழியைப் பார்த்துக்கொண்டு செல்லலாம்' என்று கூறி, அப்பணியாளரை நாகபட்டினத்திற்குத் திரும் பிப் போகும்படி செய்தனர். அவ் வேவலாளரும் நாக பட்டினம் சென்று பரிபாலகரை யணுகித் தாங்கள் கள்வரை அரும்பாடு பட்டுத் தேடிக் கண்ட வரலாற் றினையும் அவர்கள் அளித்த பதிலையும் அறிவித்தனர்.

அவருரை கேட்ட தலைவர்கள் வெருண்டு அம் மூர்க்கனைப் பிடித்துத் தண்டியாமல் விடுவதில்லை யென்று பேராவேசத்துடன் கிளம்பிப் புறப்பட்டார் கள். அவர்கள் உத்தமர் கோயில் சென்று திரிந்து கள்வர் இருந்த விடமறிந்து அவரைச் சந்தித்தனர். அவர்கள், கள்வர் தலைவராகிய ஆலிநாடரை நோக்கி, 'என்ன மாயம் செய்து அவ் விக்கிரகத்தைக் களவா டினாய்? அதனை இன்னே தந்திடுக; நாங்கள் மிகவும் அருமையாய்ப் போற்றிவந்த புத்தர் சிலையை இழந்து பிரிந்திருத்தற் காற்றேம்' என்று கூறினார்கள். ஆலி நாடர் அவர்களை நோக்கி, 'நாங்கள் நாகபட்டினத்தி லிருந்து அச் சிலையைக் கொணர்ந்தது உண்மையே. ஆயினும், இப்போது அதை உங்களிடம் ஒப்புவிக்க முடியாது. அடுத்த வருஷம் பங்குனி மாதத்தில் உரோகிணி நக்ஷத்திரத்திலே நீங்கள் வந்து கேட்பீர்க ளாயின், உங்கள் விக்கிரகத்தைக் கொடுக்கத் தடை யில்லை' என்று கூறினர். அதைக்கேட்ட நாகபட்டினத் தார் ஆழ்வாரை நோக்கி 'நீர் கூறுவதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஆகையால், உமது கையொப்பமிட்ட சீட்டொன்று எழுதிக்கொடும்' என்று நிர்ப்பந்திக்கத் தொடங்கினார்கள். அப்போது ஆலிநாடரும் 'சரி'

என்று அவர்கள் கருத்துக்கிசைந்து ஒரு சீட்டில் 'மேல் வருஷம் பங்குனிமாதத்தில் உரோகிணி நக்ஷத்திரத் திலே உங்களுடைய விக்கிரகம் சிறுவிரலுக்குக் குறை யாமல் உங்களிடம் நீங்கள் விரும்பிக் கேட்கும்போது ஒப்புவிக்கக் கடவோம்' என்று எழுதித் தம் தோழர்கள் கையொப்பத்தையும் அதில் இடச்சொல்லித் தாமும் கையெழுத் திட்டுப் பின் அச்சீட்டை எதிராளிகள் கையில் கொடுத்தனுப்பிவிட்டு நிம்மதியா யிருந்தார்.

அப்பால் ஆழ்வார் தமது பொற்சிலையைப் பின்னப் படுத்தி விலைபேசிப் பெரும்பொருள் பெற்று அதனைக் கொண்டு திருவரங்க வாலயத் திருப்பணி செய்ய முற் பட்டுத் திருமதில் கட்டத் தொடங்கினார்.

கோயிற் கைங்கர்யம் குறைவின்றி நிறைவேறிய தும் நாகபட்டினத்துத் தலைவர் மங்கைநாடன் இருப் பிடமறிந்து பிரயாணமாகி வந்து அவரையும், அவரது சீடரையும் நோக்கி, 'எமக்குச் சேரவேண்டிய விக்கிர கத்தைக் கொடுப்பதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் இட்ட தவணையும் கடந்துவிட்டதே. இனி உம்மை நாங்கள் சும்மா விடோம்' என்று கூறினார்கள். ஆலிநாடர் 'நாங்கள் உமக்கு எழுதிக்கொடுத்த சீட் டைக் கொண்டுவந்தீர்களாயின், உங்களுக் குரியதைக் கொடுக்கத் தடையில்லை' என்று உத்தரங் கூற அவர் களும் உடனே தம்முடன் கொண்டுவந்திருந்த சீட்டை எடுத்துப் படித்தனர். ஆலிநாடரும் 'நாங்கள் எழுதிக் கொடுத்திருப்பதுபோல ஒரு சிறு விரலுக்குக் குறை யாமல் விக்கிரகத்தைக் கொடுத்து விடுகிறோம்' என்று சொல்லி அச் சிலையின் கைவிரலை மட்டும் கொண்டுவந்து கொடுத்தார்கள். நாகபட்டினத்தார் அதனைப் பெற

உடன்படாமல் ஆலிநாடரை நெருக்கத் தலைப்பட்டனர். ஆலிநாடரோ அவர்களை நோக்கி, 'இவ்விவாதம் நமக்குள் தீராது. ஆகையால், மத்யஸ்தர்களைக் கொண்டு நாம் நமது வழக்கைத் தீர்த்துக்கொள்வதே முறை' என்று கூறினார். அவர்களும் அவ் வேற்பாட்டினுக் கிசைந்து சில மத்யஸ்தர்களை அழைத்துத் தம் வழக்கை அறிவித்துச் சீட்டையுங் காண்பித்தனர். சீட்டைப் பார்த்த பின் மத்யஸ்தரும் 'ஆலிநாடர் கூறுவதே நியாயமாகும். சீட்டிலும் சிறு விரலுக்குக் குறையாமல் திருப்பிக் கொடுப்பதாகத்தான் கண்டிருக்கிறது. ஆகையால் அதனைப் பெற்றுப் போவதே சரி' என்று பேசித் தம் தீர்மானத்தை வெளியிட்டனர். அதைக் கேட்ட நாகபட்டினத்தார் 'இனி நாம் செய்யக் கிடப்பதொன்றுமில்லை' என்று கூறி மனமுளைந்து ஆழ்வார் கொடுத்த பொற் சிறு விரலைப் பெற்றுத் தம் நகருக்கு ஏகினர்.

19. கம்மாளர்க்குப் பரமபத மளித்தது

கோயிற் றிருப்பணிகள் முற்றும் முடிவுற்றதும் கம்மாளர் வந்து ஆலிநாடரை நோக்கி, 'ஐயனே! எமக்குச் சேரவேண்டிய கூலியைக் கொடுத்து எங்களுக்கு விடைகொடுத்து அனுப்பும்' என்று கூறினார். ஆலிநாடர் அவர்களை நோக்கி 'நான் சேமவைப்பாகப் போற்றி வரும் தனம் அநேக மைல்களுக்கு அப்பாலுள்ள தீவில் இருக்கிறது. நீங்கள் என்னைப் பின்பற்றி அத் தீவிற்கு வந்தீர்களாயின், உங்களுக்குச் சேரவேண்டிய கூலித் தொகை முழுவதையுங் கொடுக்கத் தடையில்லை' என்று கூறினார். அவர்களும் அவருடைய கருத்துக் கிசைந்து அவரோடு சென்றனர். ஆழ்வார் அவர்களை ஓட மொன்றில் ஏற்றிக்கொண்டு சென்று

நட்டாற்றை யடைந்தனர். அவ் வோடக்காரன் அவர்களை அவ்விடத்தில்தானே நிறுத்திச்சென்று வேறொரு ஓடங் கொணர்ந்து அதில் ஆழ்வாரையும், அவரது நண்பரையும் ஏற்றிக்கொண்டு கரைசேர்ந்தான். கம்மாளர் ஏறியிருந்த ஓடத்தைத் தண்ணீரில் கவிழ்த்துவிட்டு இவர்கள் கரைக்கு வந்துவிடவே, அந்த ஏழைக் கம்மாளர்கள் தண்ணீரில் மூழ்கித் தம் உயிரிழந்தனர்.

கம்மாளர் ஏறியிருந்த ஓடத்தைக் கவிழ்த்துக் கரை சேர்ந்த ஆலிநாடரை அவரது சந்ததியார் வளைத்துக்கொண்டு 'எமது தந்தையாரையும், பாட்டன்மாரையும் எங்குக் கூட்டிச் சென்றீர்? அவர்களை எங்கே விட்டுவிட்டீர்? நீர் மாத்திரம் வந்து தோன்றுகின்றீரே. அவர்களிருக்கு மிடத்தை அறிவித்தாலன்றி நாங்கள் உம்மை விடோம்' என்று சூழ்ந்துகொண்டனர். ஆலிநாடர் அவர்களைப் பார்த்து 'உமது பெரியோரை இங்கிருந்து வெகு தூரத்தேயுள்ள ஒரு தீவிற்கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு வந்திருக்கிறேன். அத் தீவில் அளவிறந்த திரவியம் உண்டு. அங்கு அபரிமிதமாகக் குவிந்து கிடக்கும் பொன்னைத் திரட்டிச் சுமையாகக் கட்டிக்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டிய திரவியத்தை வாரிச்சுமையாக்கி எடுத்துக்கொண்டு விரைவில் மீள்வர். நீங்கள் அவர்களுக்காகச் சிறிதும் அஞ்ச வேண்டாம்' என்று கூறினார்.

அவர் கூறியதைக் கேட்டுக் கடுங்கோபங்கொண்டு அவர்கள் தம் கண்களில் தீப்பொறி பறக்க ஆலிநாடரை நோக்கி, 'எமது பெற்றோரை எங்கேயோ கூட்டிச் சென்றுமடியும்படி செய்ததும் போதாமல் எங்களைக் கண்டு நகைக்கவும் முற்பட்டீரே! உம் செய்கை இருந்தவா

றென்னே ! கூலிக்காசைப்பட்டு உயிரைப் பறிகொடுத் தார்களே ! எம் மூதாதைகளைக் கொன்ற பாவியை இனிச் சும்மா விடோம் !" என்று சொல்லி அவரைச் சிறைப்படுத்தி அரசனிடம் அழைத்துச்செல்லத் தீர்மா னித்தனர்.

ஐயோ பாவம் ! என் செய்வார் ஆலிநாடர்! இராஜ தண்டனையினின்றும் தப்பிப் பிழைப்பதெப்படி ? இவ் விடுக்கணில் தம்மைக் காப்பாற்றக் கூடியவன் பரந்தா மனே யென்று நினைத்து ஆலிநாடர் கமலக் கண்ண னது கழலிணையைத் தியானித்திருந்தார். கருணையங் கடலாகிய முகில்வண்ணனும் கலியனரது கனவில் தோன்றி, 'அன்பனே ! அஞ்சற்க. அக் கம்மாளர் காவிரியில் மூழ்கித் திருமண் காப்புத் தரித்துத் திரு வரங்கன் திருமண்டபம் வரட்டும். நான் அவர்கள் வேண்டி நிற்கும் குறையைப் பூர்த்திபண்ணி வைக் கிறேன்' என்று திருவாய் மலர்ந்தருளினர். ஆழ்வாரும் கவலை யொழிந்து மறுநாளே அக் கம்மாளரை அழைத்து 'நீங்கள் இப்போதே சென்று காவிரி நதியில் நீராடித் திருமண்காப் பிட்டுக்கொண்டு தூய மனத்துடன் திரு மண்டபம் வாருங்கள். அங்கே உமது பெரியோரைக் காண்பீர்கள்' என்று கூறினர். அக் கம்மாளரும் அவ் வுரையைக்கேட்டு மகிழ்வுற்று நதிக்குச் சென்று நீராடித் தூயவெள்ளாடை யணிந்து ஊர்த்துவ புண்ட்ரந்தரித் துக் கோயில் மண்டபத்தில் குழுமியிருந்தனர். உடனே ஆழ்வார் அவர்களை நோக்கி 'நீங்கள் உங்களுடைய மூதாதையரின் பேரைக் கூவி அழையுங்கள். அவர்கள் உங்கள் குரலறிந்து பதிற்கூறி உங்களுக்குக் காட்சி யளிப்பார்கள்' என்று கூற அக் கம்மாளர் மரித்தோ ரைப் பேரிட்டழைத்தனர். உடனே அவர்களுடைய

பித்ருதேவதைகள் பெருமாள் சந்நிதியில் தோன்றித் தமது சந்ததியாரைப் பார்த்து, 'நாங்கள் ஆழ்வாரின் பரம கிருபையைப் பெற்றுப் பரமபத நாதன் திருவடியடைந்து கிருதார்த்தரானோம். ஆதலான் எமக்காக இனி நீங்கள் கவலையுறல் வேண்டாம். நீங்களும் ஆழ்வாரின் திருவடிகளையே தஞ்சமென்று பற்றிச் சிறிது காலம் இம்மைச் சுகங்களைத் துய்த்துப் பின் நற்கதி பெறலாம்' என்று கூறி மறைந்தனர். அவருரைத்த வண்ணமே கம்மாளர்களும் ஆழ்வாரின் திருவடித் தாமரைகளில் சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டுப் பணிந்து அவர் உகந்த பணிகளைச் செய்து மேம்பாடடைந்தனர்.

20. திவ்விய தேச மங்களாசாஸனம்

அப்பால் கலியன் அநந்தசயனனைத் தொழுது அநுமதி பெற்றுத் திவ்ய தேச யாத்திரைக்குப் புறப்பட்டார். **தென்திருப்பேர், நந்திபுரவிண்ணகரம், திருவிண்ணகரம்** முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு **திருநறையூருக்கு** வந்து அக் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் **நம்பி** விஷயமாக நூறு பாசுரங்கள் அருளிச்செய்தார். பின் **திருச்சேறை, தேரழுந்தூர், சிறுபுலியூர்** முதலிய திவ்ய தேசங்கட்குச் சென்று சேவித்துத் **திருக்கண்ணமங்கைக்கு** எழுந்தருளினார். அவர் சந்நிதி சென்று எம்பெருமானைத் துதித்துப் பரவசராய் நிற்கையில் திருநின்றவூர் பத்தராவிப்பெருமாள் அவரிடமிருந்து மீண்டுமொரு பாடல்பெறத் திருவுள்ளமுவந்து அக் கோயிலில் ஆழ்வார்க்குச் சேவை சாதித் தருளினார். உடனே திருமங்கை யாழ்வாரும் 'நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை ...... கண்ணமங்கையுட் கண்டுகொண் டேனே' என்று அப் பெருமானை

யும் திருக்கண்ணமங்கைப் பெருமானுடன் சேர்த்துப் பாடி அனுபவித்தார். ஆலிநாடர் திருக்கண்ணமங்கையைவிட்டுப் புறப்பட்டு **திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருநாகை** முதலிய சோழ நாட்டுப் பதிகளையும், **திருப்புல்லாணி, திருக்குறுங்குடி** என்னும் பாண்டிய நாட்டுத் தலங்களையும் சேவித்து மலை நாடு அடைந்து **திருவல்லவாழ்** எம்பெருமானைச் சேவித்தார். பின் **திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர்** முதலிய மகா நாட்டு க்ஷேத்திரங்களுக்குச் சென்று சேவித்தார். ஆழ்வார் தாம் சென்று சேவித்த திவ்ய தேசத் தெம்பெருமான்களின் மீது பதிகங்கள் பாடிப் பெரிய திருமொழி யென்னும் பிரபந்தத்தை முடித்தார். பெரிய திருமொழியைப் பாடிய சில காலத்திற்குள் திருமங்கையாழ்வார் ஐந்து வேறு பிரபந்தங்களையும் இயற்றினார்.

21. அத்யயனோத்ஸவம்

திவ்ய தேசயாத்திரையை முடித்துக்கொண்டு திருமங்கைமன்னன் ஸ்ரீ ரங்கம் வந்து சேர்ந்தார். அவர் அரங்கத்தரவணைச் செல்வன் கழலிணை பணிந்து நின்று தாம் இயற்றிய திருநெடுந்தாண்டகத்தைத் தேவகானத்திற் பாடினார். பேரருளாளன் ஆழ்வாரைக் கடாக்ஷித்து 'ஆலிநாட! நீர் வேண்டி நிற்கும் வர முண்டாயின் கேளும்' என்று அநுக்கிரகித்தார். ஆழ்வாரும் ஸ்ரீரங்கநாதன் திருவருட் டிறனை வியந்து மனம் பூரித்து விநயமாய் 'சுவாமீ, அத்யயனோத்ஸவத்தில் சந்நிதிகளில் கீர்வாண வேதங்களைப் பாராயணஞ் செய்வது தொன்று தொட்டு வழக்காறாக நடந்து வருகிறது. வருகிற மார்கழி மாத முதற்கொண்டு சந்நிதிகளில் கீர்வாண வேதத்தோடு நம்மாழ்வார் அருளிச் செயல்களாகிய தமிழ்

மறைகளையும் உடன் சேர்த்துப் பாராயணம் பண்ணி வரும்படி நியமனம் சாதித்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்துக்கொண்டார். அவிகாடர்க்கு நம்மாழ்வா ரிடமுள்ள பக்திக்காக அவரை மெச்சி நம்பெருமாளும் அவருடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்து வைப்ப தாகத் திருவுள்ளம் பற்றினர்.

22. பரமபதமடைந்தது

உடனே திருமங்கையாழ்வார் திருநகரிக்குப் புறப் பட்டுச் சென்று அங்கு அர்ச்சாவதாரமாக வீற்றிருந்த நம்மாழ்வாரைச் சகல மரியாதைகளோடும் எழுந்தருள வித்துக்கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலுக்குச் சென்றார். பின் அத்யயனோத்ஸவத்தைத் தொடங்கி அதை உபய வேத பாராயணத்தோடும் அதிக சிறப்பு டன் நடப்பித்து மீண்டும் நம்மாழ்வாரைத் திருக்குருகூ ருக்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றார். அது முதல் பிரதி வருஷமும் அவ்வுத்ஸவத்தை அங்ஙனமே செய்து வரும்படி திட்டஞ் செய்து திருமங்கைமன்னன் தமது தேவியாரான குமுதவல்லியாருடன் யோகத்தில் வெகு காலம் எழுந்தருளி யிருந்து முடிவில் அந்தமில் பேரின்ப வீட்டினை யடைந்தார்.

Printed at the "Aurora Press," Madras — 1927. (B).